# சேரன் நல்லவன்

கதை: இ.ஜே.சுந்தர்
ஓவியம்: ஷேக்







குயத்தியார்: அறிவுத்திறனும் போராற்றலும் நிரம்பிய நம் வேந்தர் எந்தப்படை வந்தாலும் வீழ்த்துவார். அவர் வெற்றியை நான் பாடத்தான் போகிறேன். உங்களுக்கு நிறையப்பெருந்தாழிகள் செய்ய வாய்ப்பு காத்திருக்கிறது.
கணவர்: போர் முழக்கம் தூரத்தில் கேட்கிறது. வா! நாம் மேல் மாடத்திற்குச்சென்று பார்ப்போம்.
3


கரிகாலன் தலைமையில் படைகள் சேரனின் படைகளை எதிர்கொள்ள வெண்ணிக்கு வந்து கொண்டிருக்கின்றன.
கரிகாலன்: குயத்தியாரா? எச்சரிக்கை! வீட்டுள்ளே செல்லுங்கள். எதிரிப்படைகள் ஆவேசமாக வருகின்றன.
வெண்ணிப் பறந்தலை
குயத்தியார்:அரசே கவலைப்பட வேண்டா. வெற்றி நமதே.
4


இடியும் மின்னலும் கீழே இறங்கி வருவது போல வாளும் ஈட்டியும் மோதுகின்றன. கரிகாலன் படைகள் சேரன் படைகளை முறியடிக்கின்றன.
கரிகாலன்: இது உன் கதையை முடிக்கும்!
5
சோழர் படைகள்:
வெண்ணிப் பறந்தலையில் வெற்றிகண்ட கரிகாலச் சோழன் திருமாவளவன் வாழ்க!
6
குயத்தியார்: பாருங்கள்! மன்னர் வீசிய வேல் பெருஞ்சேரலாதன் மார்பில் பாய்ந்து முதுகையும் தாக்கி கீழே விழுந்து கிடக்கிறார்.
7


சேரன்: நான் புறமுதுகிடவில்லை. ஆனால் துளைத்த வேல் என் முதுகையும் காயப்படுத்திவிட்டது. புறப்புண்ணுக்கு நாணுகிறேன். இன்னும் இறக்காமல் இருக்கிறேனே... நான் புறப்புண் பட்டதற்கு வடக்கிருந்து உயிர் துறப்பேன்.
8
வடக்கிருந்து உயிர் துறந்தான் சேரன்.


உறையூர் சோழர் அரண்மனை. புலவர்கள் பலரும் சோழனை வாழ்த்திப்பாடுகின்றனர்.
கரிகாலன்: குயத்தியாரே! இவை மிகைப்படுத்திய வாழ்த்துகள். நீங்கள் போர் நடந்ததையே நேரில் பார்த்தீர்கள். உங்கள் வாழ்த்தே உண்மையாக இருக்கும்.
9


குயத்தியார்: காற்று இயங்கும் திசையில் நுட்பமாகக் கப்பலைச் செலுத்தும் அறிவாற்றல் மிக்கவர்கள் உன் முன்னோர். அந்த வழியில் நீயும் அறிவாற்றலுடன் பகைக்கடலைக் கடந்து வெற்றி என்னும் கப்பலைக் கரை சேர்த்துவிட்டாய். ஆனால் உன்னால் ஏற்பட்ட புறப்புண்ணுக்கு நாணி உயிர் துறந்த சேரன் உன்னைவிட நல்லவன். ஏனெனில் உனக்கு வெற்றியை அளித்தவிட்டு அவன் இறவாப்புகழ் பெற்றுவிட்டான்.
கரிகாலன்: சேரன் செயலுக்குத் தலைவணங்குகிறேன். உங்கள் பாடல் எனக்கன்று, அவனுக்கே இறவாப்புகழ் நல்கட்டும்!
அந்தப் பாடல் இதுவே.
நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!
களிஇயல் யானைக் கரிகால் வளவ!
சென்றுஅமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய், நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப் புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி, வடக் கிருந்தோனே.
(புறம்:66)